வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவரின் செயல்முறைகள்
ந.க.எண் 4080 / ஆ5 / 2018 நாள் –08–2018

பொருள்: பள்ளிக்கல்வித் துறை – வேலூர் மாவட்டம் – NEET / JEE போன்ற போட்டித் தேர்வுகள் மற்றும் திறன் தேர்வுகள்-அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி பயிலும்மாணவர்கள் - திறனறிவுத் தேர்வு – தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்குதல்-சார்ந்து.

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6. ந.க.எண். 33989/கே/2018 நாள். 07. 08.2018

-----

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி 2018-2019 ம் கல்வி ஆண்டில் நடைபெற இருக்கும் போட்டித் தேர்வுகளுக்கு ( JEE / NEET ) அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12-ம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு பயிற்சி மையங்களில் செப்டம்பர் முதல் வாரத்தில் துவங்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

**இப்பயிற்சிக்கு 12-ஆம் வகுப்பு மாணவர்களில் தகுதியானவர்களை தெரிவு செய்யும் பொருட்டு தகுதித் தேர்வு 14.08.2018 அன்று அந்தந்த பள்ளிகளில் நடத்தப்படவேண்டும் என தலைமையாசிரியர்களுக்கு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**NEET தேர்விற்கு பயிற்சி பெறும் மாணவர்களை தெரிவு செய்ய 60 கேள்விகள் (இயற்பியல் 15 , வேதியியல் 15, தாவரவியல் 15, விலங்கியல் 15) கொண்ட வினாத்தாள் மற்றும் JEE பயிற்சி பெறும் மாணவர்களுக்கு 45 கேள்விகள் (இயற்பியல் 15, வேதியியல் 15, கணிதம் 15) கொண்டவினாத்தாள் தலைமை ஆசிரியர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக 11–08–2018 அன்று அனுப்பிவைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.**

இத்தேர்விற்கான வினாக்கள் கடந்த**11-ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களிலும் மற்றும் 12-ம் வகுப்பில் முதல் இடைநிலைத் தேர்வுக்குரிய பாடப் பகுதிகளில் இருந்தும் இருக்கும்** என்பதை மாணவர்களுக்கு தெரிவித்து, தகுதித் தேர்வினை திறம்பட நடத்தி எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் செயல்படுமாறு தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளி அளவில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரத்தை, படிவம் 1 மற்றும் படிவம் 2ல் (Excel Sheet - Arial font) ல் தட்டச்சு செய்தி அதன் நகல் மற்றும் சிடியினை **14–08–2018** அன்று மாலை **06.00** மணிக்குள் சாா்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் முதன்மைக்கல்வி அலுவலகத்தில் ஆ5 பிரிவு எழுத்தரிடம் நேரில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாணவர்கள் NEET மற்றும் JEE ஏதேனும் ஒரு தேர்விற்கு மட்டுமே தகுதி தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும். என்பதை அனைத்து தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

1. படிவம் –1
2. படிவம் –2

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூார்

**பெறுநர்**

அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

**நகல்**

1. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.

2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
வேலூார் / அரக்கோணம் / இராணிப்பேட்டை / வாணியம்பாடி / திருப்பத்துார்
தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.

## குறிப்பு

1. **14–08–2018 அன்று பெறப்படும் விவரங்களை தொகுத்து பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பப்படவுள்ளதால் காலதாமதமாக பெறப்படும் விவரங்களை பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது. காலதாமதத்திற்கு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களே பொறுப்பாவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.**
2. NEET மற்றும் JEE **விடைக்குறிப்புகள் 14–08–2018 அன்று மின்னஞ்சல் மூலம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

## படிவம்-1

**குறிப்பு** : படிவத்தினை Excel-ல் பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.**வகுப்பு: 12**

**மாவட்டம்:** **ஒன்றியம்** **பயிற்று மொழி: தமிழ்/ஆங்கிலம்**

| வ. எண். | பயிற்சி மையப்பள்ளி | மாணவர் பெயர் | பள்ளியின் பெயர் | அரசு / அரசு உதவி பெறும் பள்ளி | தொலைபேசி எண் | NEET / JEE |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## படிவம் – 2

**வகுப்பு: 11**

**மாவட்டம்:** **ஒன்றியம்** **பயிற்று மொழி: தமிழ்/ஆங்கிலம்**

| வ. எண். | பயிற்சி மையப்பள்ளி | மாணவர் பெயர் | பள்ளியின் பெயர் | அரசு / அரசு உதவி பெறும் பள்ளி | தொலைபேசி எண் | NEET / JEE |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |